**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.196/2017** **Date :19/04/2023**

**PW17 (சண்முகம் த/பெ.ராசு ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

15.அய்யம்பெருமாள் த/பெ.பெரியசாமி என்பவர், எங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கடன் பேரேடு மற்றும் பணம் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் கையொப்பமிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆலை கரும்பு கடன் 16/93 ன் படி ரூ.1375/- பெற்றிருந்தேன் என்றும், இந்த கடனை ஈடு செய்ய கே.சி.சி கடன் கோரியிருந்தேன் எனவும், எங்களது வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். இந்த கடன் எண் 16/93 ல் எவவளவு நிலுவை தொகை செலுத்த வேண்டியிருந்தது என எனது விசாரணையில் நான் தெரிந்து கொள்ளவில்லை. மேலும், ரூ.5878/- மட்டுமே கடன் கோரியிருந்தேன் என எங்களிடம் கூறியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கோரியதற்கான கடன் விண்ணபத்தினை கைப்பற்றி விசாரணை செய்தோமா என்றால் இல்லை. உரம் பெற்றதற்கான ஆதாரங்கள் என்னிடம் இல்லை என இந்த சாட்சி கூறியுள்ளார் என்றால் சரிதான். விவசாய கடன் பெறும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை ரொக்கமாகவும், மீதி தொகைக்கு உரம் மற்றம் பூச்சிமருந்தாகவும் கொடுக்கப்படும் என்றால் சரிதான். கே.கே.சி.சி. எண்.66 க்கு எவ்வளவு தொகை ரொக்கமாகவும், எவ்வளவு தொகை பொருளாகவும் கொடுக்கப்பட்டது என விசாரணையில் தெரிந்து

கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ரொக்கமாக ரூபாய் 10,120/-ம் ரூபாய் 2000/-ற்க்கு உரமாகவும், ரூபாய் 1000/-க்கு விதையாகவும் பெற்றுக்கொண்டுள்ளார். பணம் பெற்றுக்கொண்டதற்கா பணப்பட்டுவாடா பதிவேட்டு கையொப்பமும், பொருட்கள் பெற்றுக்கொண்டதற்கான இரசீதும் எனது விசாரணையில் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணங்களை நாங்கள் பார்வையிட்டு கையொப்பம் உள்ளதா என உறுதி செய்தோமா என்றால் பார்த்தோம். நான் எதிரியிடம் கையொப்பம் இட்டு கொடுத்தேன் எனவும், எதிரியை தொடர்பு படுத்தும் விதமாகவோ இந்த சாட்சி எந்தவித சங்கதிகளையும் அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இந்த சாட்சி விசாரணை அலுவலரிடம் கூறினேன் என்று மட்டும் தான் கூறியுள்ளார் என்றாலும், எழுத்து மூலமான வாக்குமூலத்தில் கையெழுத்து இட்டு கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சாட்சி முறைப்படி கடன் பெற்றுள்ளார் என்றாலும் அதிலுள்ள நிலுவைத் தொகையை செலுத்தாததால் இவ்வாறு சாட்சி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

16.பூங்கோதை க/பெ.அருணாசலம் என்பவர், எங்களிடம் கொடுத்த வாக்குமூல்த்தில் கடன் பதிவேடு மற்றும் பற்று சீட்டு ஆகியவற்றில் கைரேகையிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த கடன் எண் 519 ல் உள்ள தொகையில் கே.கே.சி.சி. கடன் விண்ணப்பித்திருந்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த கடன்

தொகையில் எவவளவு நிலுவை தொகை செலுத்த வேண்டியிருந்தது என எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேன். ஆனால் ஆவணங்களை கைப்பற்றவில்லை. பழைய கடனை தீர்த்து கொண்டதற்கான இரசீதை எனது கணவர் அருணாசலம் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டார் என கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த அருணாச்சலத்தை விசாரித்து எவ்வளவுதொகைக்கு இரசீது கொடுத்தார்கள் என தெரிந்துகொண்டோன என்றால் தெரிந்துகொண்டேன். ஆனால் இரசீதை கைப்பற்றவில்லை. மேலும், வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை. இந்த பூங்கோதைக்கு கடன் கொடுக்கப்பட்டதற்கான ஆவணங்களை நான் கைப்பற்றி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கே.கே.சி.சி. எண்.88 க்கு எவ்வளவு தொகை ரொக்கமாகவும், எவ்வளவு தொகை பொருளாகவும் கொடுக்கப்பட்டது என விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ரொக்கமாக ரூபாய் 30,600/-ம் ரூபாய் 1900/-ற்க்கு உரமாகவும், ரூபாய் 950/-க்கு விதையாகவும் பெற்றுக்கொண்டுள்ளார். பணம் பெற்றுக்கொண்டதற்கான பணப்பட்டுவாடா பதிவேட்டு கையொப்பமும், பொருட்கள் பெற்றுக்கொண்டதற்கான இரசீதும் எனது விசாரணையில் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணங்களை நாங்கள் பார்வையிட்டு கையொப்பம் உள்ளதா என உறுதி செய்தோமா என்றால் பார்த்தோம். நான் எதிரியிடம் கையொப்பம் இட்டு கொடுத்தேன் எனவும், எதிரியை தொடர்பு படுத்தும் விதமாகவோ இந்த சாட்சி எந்தவித சங்கதிகளையும் அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை

என்றால் சரிதான். இந்த வழக்கில் இந்த சாட்சி விசாரணை அலுவலரிடம் கூறினேன் என்று மட்டும் தான் கூறியுள்ளார் என்றாலும், எழுத்து மூலமான வாக்குமூலத்தில் கையெழுத்து இட்டு கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சாட்சி முறைப்படி கடன் பெற்றுள்ளார் என்றாலும் அதிலுள்ள நிலுவைத் தொகையை செலுத்தாததால் இவ்வாறு சாட்சி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. சரஸ்வதி க/பெ.முத்துதுலிங்கம் என்பவர், எங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் லட்சுமணனிடம் நான்தான் கையொப்பமிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். இந்த கடன் எண் 95 ல் எவவளவு தொகை சரஸ்வதிக்கு செலுத்தபட்டது என எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேன். அதாவது ரூ.11,620/- செலுத்தப்பட்டுள்ளது. ரொக்கமாக ரூபாய் 10,120/-ம் ரூபாய் 1000/-ற்க்கு உரமாகவும், ரூபாய் 500/-க்கு விதையாகவும் பெற்றுக்கொண்டுள்ளார். பணம் பெற்றுக்கொண்டதற்கா பணப்பட்டுவாடா பதிவேட்டு கையொப்பமும், பொருட்கள் பெற்றுக்கொண்டதற்கான இரசீதும் எனது விசாரணையில் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணங்களை நாங்கள் பார்வையிட்டு கையொப்பம் உள்ளதா என உறுதி செய்தோமா என்றால் பார்த்தோம். இந்த வழக்கில் இந்த சாட்சி விசாரணை அலுவலரிடம் கூறினேன் என்று மட்டும் தான் கூறியுள்ளார் என்றாலும், எழுத்து மூலமான வாக்குமூலத்தில் கையெழுத்து இட்டு கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சாட்சி முறைப்படி கடன் பெற்றுள்ளார் என்றாலும் அதிலுள்ள நிலுவைத் தொகையை செலுத்தாததால் இவ்வாறு சாட்சி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள்

சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

18.பூங்காவனம் க/பெ. ஆறுமுகம் என்பவர், எங்களிடம் கொடுத்த வாக்குமூல்த்தில் நான் எந்த கடனும் கேட்கவில்லை எனவும் எந்த தொகையும் பெறவில்லை என்றும் கூறியுள்ளார் என்றால் சரிதான். அவரது பெயரில் கடன் எண் 102 உள்ளதாக எவ்வாறு தெரிந் கொண்டேன் என அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். கடன் பேரேடு மற்றும் பணம் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் உள்ள கைரேகையை பற்றி விசாரிக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் உள்ள கைரேகையை சாட்சியடம் கைரேகை பெற்று ஒப்பிட்டு பார்த்துள்ளேன் என்றால் சரிதான். இந்த ரேகையை ஒப்பிட்டு பார்க்காமல் நாங்களாகவே ஒரு முடிவுக்கு வந்தள்ளோம் என்றாலும், அதனால் இது சட்டபடி ஏற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் இந்த சாட்சி விசாரணை அலுவலரிடம் கூறினேன் என்று மட்டும் தான் கூறியுள்ளார் என்றாலும், எழுத்து மூலமான வாக்குமூலத்தில் கையெழுத்து இட்டு கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சாட்சி முறைப்படி கடன் பெற்றுள்ளார் என்றாலும் அதனை ஏமாற்றுவதற்காக கடன் பெறவில்லை என சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

JudgmentCopy

19. செங்கமலம் க/பெ. தமிழ்மணி என்பவர், எங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கடன் பதிவேடு மற்றும் கடன் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் கைரேகையிட்டு கொடுத்தேன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் கடன் பெற்றதற்கான பணத்தை பெறவில்லை என யார் மூலமாக தெரிந்துள்ளார் என கூறவில்லை. கடன் எண்113 ல் ரூ.5900/-வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்களளை நாங்கள் கைப்பற்றவில்லை. அந்த தொகையில் ரொக்கமாக ரூபாய் 4550/-ம் ரூபாய் 900/-ற்க்கு உரமாகவும், ரூபாய் 450/-க்கு விதையாகவும் பெற்றுக்கொண்டுள்ளார். பணம் பெற்றுக்கொண்டதற்கான பணப்பட்டுவாடா பதிவேட்டு கையொப்பமும், பொருட்கள் பெற்றுக்கொண்டதற்கான இரசீதும் எனது விசாரணையில் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த ஆவணங்களை நாங்கள் பார்வையிட்டு கையொப்பம் உள்ளதா என உறுதி செய்தோமா என்றால் பார்த்தோம். நான் எதிரியிடம் கையொப்பம் இட்டு கொடுத்தேன் எனவும், எதிரியை தொடர்பு படுத்தும் விதமாகவோ இந்த சாட்சி எந்தவித சங்கதிகளையும் அவரது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இந்த சாட்சி விசாரணை அலுவலரிடம் கூறினேன் என்று மட்டும் தான் கூறியுள்ளார் என்றாலும், எழுத்து மூலமான வாக்குமூலத்தில் கையெழுத்து இட்டு கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சாட்சி முறைப்படி கடன் பெற்றுள்ளார் என்றாலும் அதிலுள்ள நிலுவைத் தொகையை செலுத்தாததால் இவ்வாறு சாட்சி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

20. மணி க/பெ. சிங்காரவேலு என்பவர், எங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கடன் பதிவேடு மற்றும் பணம் பெறும் விண்ணப்பம் ஆகியவற்றில் கைரேகையை எதிரி

பெற்றார் என கூறியுள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே அவரது கணவர் பெற்ற கடனை ஈடு செய்வதற்காக இந்த கடன் பெறப்பட்டது என கூறியுள்ளார் என்றால் சரிதான். அவரது கணவர் பெற்ற கடனுக்கு எவ்வளவு நிலுவை தொகை இருந்தது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டோம். ஆனால் ஆவணங்களை கைப்பற்றவில்லை. கே.சி.சி. கடன் எண்9 ல் ரூ.7540/-வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்களளை நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் நான் பட்டுவாடா பதிவேட்டை கைப்பற்றியுள்ளேன். அந்த பணத்தை பெற்றுக்கொண்டதற்கான மணியின் கைரேகை அந்த பதிவேட்டில் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அதை நான் கைப்பற்றவில்லை. அந்த தொகையில் ரொக்கமாக ரூபாய் 5820/-ம் ரூபாய் 1150/-ற்க்கு உரமாகவும், ரூபாய் 520/-க்கு விதையாகவும் பெற்றுக்கொண்டுள்ளார். பணம் பெற்றுக்கொண்டதற்கான பணப்பட்டுவாடா பதிவேட்டு கையொப்பமும், பொருட்கள் பெற்றுக்கொண்டதற்கான இரசீதும் எனது விசாரணையில் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் தெரிந்து கொண்டேன். அந்த ஆவணங்களை நாங்கள் பார்வையிட்டு கையொப்பம் உள்ளதா என உறுதி செய்தோமா என்றால் பார்த்தோம். இந்த கைரேகையுடன் இந்த சாட்சியின் கைரேகை ஒத்துப்போகிறதா என நான் பார்க்கவில்லை. பெற்ற கடன் தொகையில் ஈடு செலுத்திய தொகை போக கூடுதரலாக ரூ.4500/- யை செலுத்தியுள்ளதாக இந்த சாட்சி கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அதற்கான இரசீது எதிரியால் கொடுக்கப்படவில்லை. இறந்த கணவர் சிங்காரவேலுவின் நிலுவை தொகை எவ்வாளவு என நான் சரிபார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கை அனுசரித்து நிலுவை தொகை உள்ளதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இந்த சாட்சி விசாரணை அலுவலரிடம் கூறினேன் என்று மட்டும் தான் கூறியுள்ளார்

என்றாலும், எழுத்து மூலமான வாக்குமூலத்தில் கையெழுத்து இட்டு கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சாட்சி முறைப்படி கடன் பெற்றுள்ளார் என்றாலும் அதிலுள்ள தொகையை செலுத்தாததால் ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இவ்வாறு சாட்சி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

கே சி சி கடன் வழங்குவதற்கான சட்ட நடைமுறைகள் முறையாக பின்பற்றுவது பட்டு உள்ளதா என நான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ஆனால் அதற்கான கையேடுகள் மற்றும் குறிப்புகள் எதையும் இந்த வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆண்டில் மொத்தம் எத்தனை பேருக்கு கே சி சி கடன் வழங்கப்பட்டது என நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். அதில் இந்த 17 பேர்கள் மட்டும் பணம் பெறவில்லை என்ற விவரத்தை நாங்கள் எவ்வாறு தெரிந்து கொண்டோம் என்றால் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் ஆவணங்களின் அடிப்படையில் தெரிந்து கொண்டோம். அந்த காலகட்டத்தில் வங்கியில் இருந்து கடன் பெற்ற அனைத்து நபர்களையும் விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. விவசாய கடன் வழங்கப்படும் போது அதற்கு ஜாமீன் தாரர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். இந்த 17 பேருக்கும் யார் பிணையமாக கையொப்பமிட்டார்கள் என நான் தெரிந்து கொண்டேன். அந்த பிணையதாரர்களை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. அவர்கள் பணம் ஏதும் கிடைக்கவில்லை என எங்களிடம் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை என்றால் சரிதான். கடன் பிரிவு எழுத்தரை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை. கடன் வாங்குவதற்கு

அனுமதி தரக்கூடிய சரகம் மேற்பார்வையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரணை செய்யவில்லை. கடன் வழங்கப்பட்டதா என்பதை உறுதி செய்யும் பொருட்டு என்ன பெயருக்கு கடன் பெற்றார்கள் என்பதை உறுதி செய்யும் பொருட்டும். கள ஆய்வு மேற்கொண்டதற்கான பதிவேடு வங்கிகளில் பராமரிக்கப்படும் என்றாலும் அதை நான் கைப்பற்றி விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். கள ஆய்வு மேற்கொண்ட அலுவலரை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

Taken down by / before me in open
court read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

LiveLaw